பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 ஆடி 16 செவ்வாய்க்கிழமை (01 –08 –1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 249

# உத்தேச தீர்வுத் திட்டம் குறித்து
# அரசுக்குள்ளேயே பெரும் இழுபறி!

## அங்கத்துவ கட்சிகள் முரண்பாடு

கொழும்பு, ஒகஸ்ட். 1

இனப்பிரச்சினைக்குரிய அரசின் உத்தேச தீர்வுத் திட்டம் குறித்து, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்குள்ளேயே பெரும் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன.

ஒவ்வொரு அங்கத்துவக் கட்சியும் தமது சொந்த நிலைப்பாட்டைத் தூக்கிப் பிடித்துக் கொண்டு இழுபறிப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

அரசாங்கத்திற்குள் என்ன வேறுபாடு இருந்தபோதிலும் உத்தேச தீர்வுத் திட்டத்தை நாளை மறுதினம் வியாழக்கிழமை மூன்றாம் திகதி — உத்தியோகபூர்வமாக வெளியிடுவதற்கு ஜனாதிபதி சந்திரிகா முடிவு செய்துள்ளாராம்.

உத்தேச தீர்வுத்திட்டத்தில் ஒற்றையாட்சிக்குப் பதிலாக பிராந்திய சபைகளின் ஒன்றியத்தை உருவாக்குவது சமஷ்டி முறையே என்றும் —

இது நாடு பிரிவதற்கு முதற்படியாக அமையும் என்றும் — ஸ்ரீ. ல. சு. க. உறுப்பினர்களே எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இந்தக் குழுவுக்கு கல்வி அமைச்சர் ரிச்சார்ட்பத்திரான தலைமை வகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறிமானி அத்துலத்முதலி தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி வடக்கு - கிழக்கை நிரந்தர

[6 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழ்க் கட்சிகளிடம் நாளை தீர்வுத் திட்டம் கையளிப்பு

இனப் பிரச்சினைக்கு உத்தேச தீர்வாக அரசாங்கம் முன்வைத்திருக்கும் அதிகாரப் பரவலாக்கல் திட்டத்தை நாளை புதன்கிழமை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தமிழ்க் கட்சிகளிடம் உத்தியோகபூர்வமாகக் கையளிக்கவுள்ளார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ. பி. ஆர். எல். எவ். புளொட், ஈ.பி.டி.பி., முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகளுக்கு இது தொடர்பாக ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

ஈ.பி.டி.பியும், புளொட்டும் ஒன்றாக ஜனாதிபதியைச் சந்திப்பதென முடிவு செய்துள்ளன. தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ. பி. ஆர். எல்.எவ்வும் தனித்தனியாக ஜனாதிபதியைச் சந்திக்கவுள்ளன. (ஐ-க)

## உத்தேச தீர்வுத் திட்டம் பற்றி
## பௌத்த தேரர்களுடன் சந்திரிகா ஆலோசனை

அரசு வெளியிடவுள்ள உத்தேச தீர்வுத் திட்டம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா கடந்த வார இறுதியில் பௌத்த நாயக்க தேரர்களைச் சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் இது தொடர்பான விவரங்கள் வெளியிடப்படவில்லை— என செய்தி ஏஜென்சி ஒன்று தெரிவித்தது. (ஐ-6)

## மணலாறில் மோதல்; சிப்பாய் பலி; மூவர் காயம்

மணலாறுப் பகுதியில் நேற்று அதிகாலை 3-30 மணியளவில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்; மேலும் மூவர் காயமடைந்தனர்.

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் இத்தகவலை வெளியிட்டது.

இதேவேளை — ஆனையிறவுப் பகுதியில் நேற்று இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது. [ஐ-4]

## அரசை கவிழ்க்கச் சதி முயற்சிகள்; புலனாய்வுத் துறையினர் எச்சரிக்கை.

### 'ராவய' கூறுகிறது

கொழும்பு, ஒக. 1

அரசாங்கத்தை ஆட்சியிலிருந்து கவிழ்க்கும் நோக்குடன் பலமான சதிமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக புலனாய்வுத்துறையினரால் அரசுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என ''ராவய'' தெரிவித்துள்ளது.

பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில் ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் முன் தோன்றுமாறு அழைக்கப்பட்டுள்ள முக்கியஸ்தர்கள் பலர், தமது எதிர்காலத்தில் சந்தேகங்கொண்டு, பல்வேறு துறைகளில் தற்போது பதவி வகிக்கும் பெரிய புள்ளிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி அரசைக் கவிழ்க்கும் சதி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனராம்.

இதன் ஓர் அங்கமாகவே ஆட்கள் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்டு ஆற

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் ஏவுகணை தாக்குதல்:
## ஸ்ரீலங்காவுக்கு அமெரிக்க விமானப்படையினர் உதவி?

கொழும்பு, ஒக 1

விடுதலைப் புலிகளால் ஏவப்படக்கூடிய ஏவுகணைகளில் இருந்து விமானங்களைப் பாதுகாப்பது தொடர்பான ஆலோசனைகளை வழங்க அமெரிக்க விமானப்படை அதிகாரிகள் இருவர் கொழும்புக்கு வந்திருந்ததாக கொழும்புப் பத்திரிகை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அரசு ஏற்கனவே அமெரிக்க அரசிடம் கோரிக்கை விடுத்திருந்தது என்றும் —

அமெரிக்காவில் உள்ள இலங்கைத் தூதர் ஜயந்த தனபால அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் வலயத் தளபதியை ஹவாயில் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. [ஐ]

## இராணுவ நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து
## நியூஸிலாந்தில் ஈழத் தமிழர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தினர்

ஒக்லண்ட், ஒக. 1

ஈழத் தமிழ் மக்கள் மீது ஸ்ரீலங்கா அரசு தொடுத்துள்ள யுத்த நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நியூஸிலாந்தில் உள்ள ஈழத் தமிழர்கள் கடந்த வாரம் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தியுள்ளனர்.

பல நூற்றுக்கணக்கான தமிழர்கள் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர்.

போரினால் பாதிக்கப்பட்டுள்ள ஈழத் தமிழர்களுக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அனுருத்த பலாலிக்கு விஜயம்

கொழும்பு, ஒக. 1

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்தை நேற்று பலாலிக்கு விஜயம் செய்தார்.

இராணுவத்தினர் ஆக்கிரமித்துள்ள பகுதிகளில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக படை உயரதிகாரிகளின் மாநாடு ஒன்று பலாலி முகாமில் நடைபெற்றது.

பிரதி அமைச்சர் அதில் கலந்து கொண்டு படை அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார். (ஐ)

## நில வெடிப்பொருள்களை அகற்ற
## திருமலையில் தமிழரை பயன்படுத்தும் படையினர்

யாழ்ப்பாணம், ஒக. 1

திருகோணமலையில் நில வெடிப் பொருள்களை அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் படையினர் தமிழ் மக்களைப் பயன்படுத்துவதாக 'புலிகளின் குரல்' வானொலி தெரிவித்தது.

பயணிகள் வாகனங்களில் சோதனையின் போது கைது செய்யப்படும் தமிழர்களையும் படையினர் இதற்காகப் பயன்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்புப்பகுதிகளிலும் இது போன்று நிலப் வெடிப் பொருள்களை அகற்றுவதில் பொதுமக்கள் படையினரால் ஈடுபடுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

படையினரின் இந்நடவடிக்கையை மனித உரிமை அமைப்புகள் பலகண்டித்து வருகின்றன. (ஐ)

## அரிசி விலைகள் மாற்றம்

யாழ்ப்பாணம், ஒக 1

அரிசி விலைகளில் இன்று முதல் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக நிதித்துறையினர் அறிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக நிதித்துறையினர் நேற்று வெளியிட்ட செய்திக் குறிப்பில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:—

இன்று முதலாம் திகதி முதல் குத்தரிசி 67 கிலோ மூடை 1,880 ரூபாவாகவும் தீட்டல் பச்சை 67 கிலோ மூடை 1,860 ரூபாவாகவும் உடையல் பச்சை 67 கிலோ மூடை 1,785 ரூபாவாகவும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

உத்தேச தீர்வுத திட்டத்தின் மூலம்

# தமிழர்களுக்கு அதிக உரிமைகளாம்; கொழும்புப் பத்திரிகைகள் பிரசாரம்

கொழும்பு, ஓக. 1
அரசாங்கம் முன்வைத்துள்ள உத்தேச அரசியல் தீர்வு யோசனைகள் குறித்து கொழும்புப் பத்திரிகைகள் தமது ஞாயிறு பதிப்புகளில் (30 ஆம் திகதி) முக்கியத்துவம் கொடுத்து முதற்பக்கத் தலைப்புச் செய்திகளை வெளியிட்டுள்ளன.

தமிழ்ப் பிராந்தியங்களுக்குக் கூடுதலான அதிகாரங்கள் இத்தீர்வு மூலம் வழங்கப்படும் என்ற தொனியில் இப்பத்திரிகைச் செய்திகளின் கருத்துக்கள் அமைந்துள்ளன. தமிழர்களுக்கு அதிக உரிமைகள் வழங்கப்படுவதாகப் பிரசாரம் செய்யும் வகையிலும் அவை அமைந்துள்ளன.

உத்தேச தீர்வுத் திட்டம் சமஷ்டி எனப் பெயரிடப்படாத ஒரு சமஷ்டி அரசமைப்பு என்று "சண்டே ரைம்ஸ்", "த ஐலண்ட்" பத்திரிகைகள் தமது ஆசிரியர் தலையங்கங்களில் தெரிவித்துள்ளன.

இதேவேளை— "சண்டே லீடர்" தனது தலைப்புச் செய்தியில் தெரிவித்திருப்பதாவது :-

★ அரசாங்கத்தின் உத்தேச தீர்வுத் திட்டத்தின்படி ஒற்றையாட்சி நாடான ஸ்ரீலங்கா பிராந்தியங்களின் ஒன்றியமாக மாறும், அதில் மத்திய அரசாங்கத்துக்கு பிராந்திய சபைகளைக் கலைக்கும் உரிமை இருக்காது.

★ அதிகாரம் வழங்கப்பட்ட துறைகளில் பிரத்தியேக சட்டமியற்றும் சக்தியைக் கொண்டிருக்கும் பிராந்திய சபைகள் பொலீஸ் அதிகாரம், பிராந்தியத்தில் உள்ள அரசுக் காணிகள் மீதான அதிகாரம் ஆகியவற்றையும் கொண்டிருக்கும்.

"சண்டே ரைம்ஸ்", "சண்டே ஐலண்ட்" ஆகிய பத்திரிகைகள் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்தனவின் உத்தேச தீர்வுக்கு எதிரான கருத்துக்களை முதன்மைப்படுத்திப் பிரசுரித்துள்ளன.

★ மூன்றில் ஒரு பகுதி நிலம், எமது நாட்டின் 65 வீத கடற்கரையோரப் பிரதேசங்கள், மிகவும் யுத்ததந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருகோணமலைத் துறை ஆகியன மக்கள் தொகையில் 6 வீதத்தினரான தமிழர் தாயகத்துக்குள் அகப்படும்—

இந்தப் பிரேரணைகளை ஜனநாயக ரீதியில் எதிர்த்துத் தோற்கடிக்க சகல தேசிய அர்ப்பணிப்புடைய ஸ்தாபனங்களும் குழுக்களும் தனிப்பட்ட விசுவாசங்களை மறந்து முன்வரவேண்டும்— என்று தினேஷ் குணவர்தன அறைகூவல் விடுத்துள்ளார்.

## தவறிவிட்டது

வல்லிபுரம் சுகுணமலர் ஆகிய எனது குடும்ப அட்டையும், எனது மகனின் முக்கிய தஸ்தாவேஜுக்களும் அடங்கிய கடித உறை மருதடிக்கும் மாலுசந்திக்கும் இடைப்பட்ட பருத்தித்துறை, யாழ். பிரதான வீதியில் 31-07-95 அன்று தொலைந்துவிட்டது.
தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் வ. திருநந்தி, விஸ்வகுல ஒழுங்கை, புலோலி கிழக்கு, பருத்தித்துறை. என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [37815]

## தேவை

அரை வட்டமான அல்லது நீளமான மாநாட்டு மேசைகள் (Conference Tables) கைவைத்த பின்னல் கதிரைகள் (Arm Chairs) கருங்காலியினாலான தளபாடங்கள் தேவை.

தொடர்பு; இல. 817,
மே\பா உதயன்,
நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். (சி-1971)

## கலந்துரையாடல் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1
இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவிருந்த நல்லூர் பிரதேச செயலர் பிரிவினருக்கான விசேட கலந்துரையாடல் இன்று நடைபெறமாட்டாது என்றும்—

இக் கலந்துரையாடல் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் என்றும் நிர்வாகசேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். [ஐ]

தீர்வுத்திட்டம் அமுலாகும்போது

# முக்கியத்துவம் இழக்கும் பல அமைச்சர்கள்

அரசாங்கத்தின் உத்தேச அதிகாரப் பரவலாக்கல் திட்டம் அமுலாக்கப்பட்டால் பல அமைச்சர்கள் தேவை அற்றவர்கள் ஆகிவிடுவார்கள் அமைச்சுகளின் கீழுள்ள பல பொறுப்புக்கள் பிராந்திய சபைகளின் கீழ் வருவதால் இந்த நிலைமை ஏற்படும்.

கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரான, வீடமைப்பு நிர்மாண அமைச்சர் நிமால் சிறிபால டி. சில்வா, சுகாதார நெடுஞ்சாலை அமைச்சர் ஏ. எச். எம். பௌஸி, கூட்டுறவு அமைச்சர் அமரசிறி தொடங்கொட, காணி அமைச்சர் டி. எம். ஜயரத்ன ஒலிபரப்பு வெகுஜனத் தொடர்பு சுற்றுலா அமைச்சர் தர்மசிறி சேனநாயக, போக்குவரத்து அமைச்சர் சிறிமானி அத்துலத்முதலி, கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் சி. வி. குணரத்ன மீன்பிடித்துறை அமைச்சர் இந்திக குணவர்த்தன, எரிபொருள்மின்சக்தி அமைச்சர் அனுருத்தரத்வத்த, புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப் ஆகியோரே தமது அமைச்சுப் பொறுப்புக்களை இழக்க உள்ளவர்கள் ஆவார்.

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர், தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர, நிதி, நீதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் வர்த்தக அமைச்சர் கிங்ஸ்லி ரி. விக்ரமரத்ன, இளைஞர் விவகார அமைச்சர் எஸ். பி. திசாநாயக, தொழில் அமைச்சர் மகிந்தராஜபக்ஷ ஆகியோரின் அமைச்சுப் பொறுப்புக்களில் மாற்றம் எதுவும் இருக்காது—

இப்படி "சண்டே லீடர்" வார இதழ் தெரிவிக்கிறது. (இ-க)

## புலிகளின் குரல் வானொலியில்

01 – 08 – 1995

செவ்வாய் இரவு

- ★ 8-02 — ஊர் சுற்றும் ஒலிவாங்கி
- ★ 8-10 — அறிந்துகொள்ளுங்கள்
- ★ 8-20 — நலந்தானா— "இடம்பெயர்ந்த மக்களது சுகநலப் பிரச்சினைகளும் அவற்றிற்கான தீர்வுகளும்"
- ★ 8-30 — செய்திகள்
- ★ 8-40 — கருத்துக்களம் — இ. இராஜேஸ்வரன் எழுதிய "பங்களிப்பு"
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்

02 – 08 – 1995

புதன் காலை

- ★ 7-02—மாவீர வணக்கம்
- ★ 7-15 — நீங்கள் கேட்டவை
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
- ★ 7-45 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

## தமிழீழ வானொலியில்

செவ்வாய் மாலை

- ★ 5-01—சிந்தனைச்சிதறல்
- ★ 5-02 — எழுச்சிகீதம்
- ★ 5-10 — புதியவை
- ★ 5-15 — தமிழிசை
- ★ 5-30 — வானொலி மதியூகம்
- ★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
- ★ 6-02 — என் தெரிவு
- ★ 6-10 — செய்திகள்
- ★ 6-15 — விளையாட்டுச் செய்திகள்
- ★ 6-20 — இவ்வாரம் இவர்
- ★ 6-30 — மாலை நிகழ்ச்சிகள் நிறைவுபெறும்

## அனுமதி இன்றி விறகு ஏற்றியவர் குற்றவாளி

யாழ்ப்பாணம், ஓக. 1
அனுமதிப்பத்திரம் இன்றி சிறிய உழவு இயந்திரத்தில் விறகு ஏற்றி சென்றதாக கோப்பாய் காவல்துறையினரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் அச்சுவேலியைச் சேர்ந்த நபர் ஒருவர் குற்றவாளியாகக் காணப்பட்டார்.

இயந்திரத்தில் ஏற்றிச் செல்லப்பட்ட விறகை பறிமுதல் செய்யும்படியும்—

தண்டப்பணமாக ரூபா 500/- செலுத்தும்படியும்— தமிழீழ மாவட்ட நீதிமன்று யாழ்ப்பாண நீதியாளர் செல்வி. எஸ். சாருலதா அவர்களினால் தீர்ப்பு வழங்கப்பட்டது. (இ)

உ

## நல்லூர் சைவ மகா சபை
நடத்தும்

# தெய்வீக அருள் இசைப் பேருரை

காலம்: இன்று [01 – 08 – 1995] செவ்வாய் தொடக்கம்
தினமும் மாலை 5-30 மணிக்கு
இடம்: நல்லூர் மேற்குவீதி ஸ்ரீமுத்துவிநாயகர் ஆலய மண்டபம்



விடயம்:
"ஸ்ரீ விஷ்ணு பாகவதம்"
நிகழ்த்துபவர்:
நல்லைக் குருமணியின் பிரதம வாரிசு
கானகதா வாரிதி, அருள்மொழி அரசு
கந்தர்மடம்
பிரம்மஸ்ரீ
சிவ. வை. நித்தியானந்தசர்மா

✶ அணிசெய் கலைஞர்கள் ✶

திரு. S. பிச்சையப்பா — முகவீணை
திரு. K. பத்மநாதன் — வயலின்
திரு. T. இராஜன் — மிருதங்கம்
திரு. K. நந்தகுமார் — முகர்சிங்

★ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம் ★

அன்பளிப்பு:
சஞ்சீவி பெயின்ற் ஹவுஸ்
இராமநாதன்வீதி, திருநெல்வேலி.
(37813)

## கண்ணீர் அஞ்சலி

30-07-95 இல் அமரத்துவ மெய்திய
எமது கல்லூரி ஆசிரியரான

### அமரர் ஐயாத்துரை மகேஸ்வரன்

அவர்களைப் பிரிந்து துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரது ஆத்மா உயர்பேறு அடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்
மாணவர்கள், பழையமாணவசங்கத்தினர்,
பெற்றார் ஆசிரியசங்கத்தினர்
இணுவில் இந்துக்கல்லூரி,
இணுவில். (37814)

## கண்ணீர் அஞ்சலி

### ஐயாத்துரை மகேஸ்வரன்
(மூர்த்தி)
(விஞ்ஞான ஆசிரியர் - இணுவில் இந்துக் கல்லூரி)

அன்னாரின் மறைவால் மனங்கலங்கி நிற்கும் அவரின் குடும்பத்தினருக்கும், உறவினருக்கும், இணுவில் இந்துக் கல்லூரி சமூகத்திற்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கிறோம்.

ஆசிரியர் நலன் புரிக் கழகம்
யா/இணுவில் மத்திய கல்லூரி
[37813]

குடாநாட்டு உண்மை நிலையை அறிய வேண்டும்

# பொதுமக்கள் இல்லாத பகுதிக்கு உணவு பொருள்கள் எதற்காக?

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் கேள்வி

கொழும்பு, ஒக. 1

யாழ். குடாநாட்டின் இராணுவத்தினர் அண்மையில் மேற்கொண்ட 'முன்னோக்சிப் பாய்தல்'' நடவடிக்கையின் போது, கைப்பற்றப்பட்ட பிரதேசங்களின் பொது மக்கள் இல்லாத நிலையில் அப்பகுதிகளுக்கு உணவுப் பொருள்கள் வழங்குவதற்கெனக் கூறி மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் தொடர்பாகச் சந்தேகங்கள் எழுகின்றன.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க (விடுத்த விசேட அறிக்கை ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குடாநாட்டில் உண்மையிலேயே அரசாங்கப்படைகள் எங்கே நிலை கொண்டிருக்கின்றன? இந்த விடயங்களை மக்களுக்கு ஒளிவு மறைவின்றித் தெரியப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமை ஆகும். பக்க சார்பற்ற பத்திரிகையாளர்கள் உடனடியாக யாழ்ப்பாணக் குடாநாட்டுக்குச் செல்வதற்கான வசதிகளைச் செய்து கொடுத்து தென்னிலங்கை மக்கள் உண்மை நிலையை அறிய அரசாங்கம் வகை செய்ய வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இராணுவத்தின் உண்மை நிலையையும்—

அவர்கள் குடாநாட்டில் நிலை கொண்டுள்ள இடங்களையும் வெளியிடுவது இராணுவ இரகசியங்களை பகிரங்கப்படுத்துவதாக அமையாது. ஏனெனில் புலிகள் இயக்கத்தினர் இவற்றை எல்லாம் நன்றாக அறிந்து வைத்திருக்கிறார்கள் — என்றும் அவர் தெரிவித்தார்.

ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி ஒழிக்கப்படுமென்ற வாக்குறுதியை மீறியதன் மூலம் மக்களால் தமக்கு வழங்கப்பட்ட அரசியல் பொறுப்பை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தனக்கு அளிக்கப்பட்ட கொடையாகக் கருதிச் செயற்படுகின்றது —என்றும் அவர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (இ)

# நல்லை ஆதீனத்தில் வகுப்புகள்

நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனத்தில் நாளை 2 ஆம் திகதி முதல் 23ஆம்திகதிவரை காலை 9 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை சைவ ஒழுக்கங்களும், அனுசரணைகளும் பற்றிய பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. (க)

# புளொட், ஈரோஸ் மட்டுமே ஏற்றன

கொழும்பு, ஒக. 1

வடக்கு- கிழக்குப் பிரச்சினை பற்றிக் கலந்துரையாட ஈ. பி. ஆர். எல். எவ் விடுத்த அழைப்பை ஏற்க தமிழர் விடுதலைக் கூட்டணியும், ஈ.பி.டி.பியும் மறுத்துள்ளன.

ஆறு தமிழ்க் கட்சிகளில் புளொட், ஈரோஸ் ஆகிய இரண்டுமே இந்த அழைப்பை ஏற்றுள்ளன. (க)

தமிழ்நாடு தேர்தலில்

# புலிகள் ஆதரவுக்கட்சிகளை சேர்க்க போட்டா போட்டி

அடுத்த வருடம் முற்பகுதியில் தமிழ் நாட்டில் நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடவுள்ள கட்சிகள் அமைக்கவிருக்கும் கூட்டணிகளில், விடுதலைப்புலிகள் ஆதரவுக் கட்சிகளை இணைக்க போட்டி இடம் பெறுவதாக சென்னைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப்புலிகள் ஆதரவு கட்சியான பாட்டாளி மக்கள் கட்சியுடன் திராவிட முன்னேற்றக் கழகமும், ஆளும் காங்கிரஸ் [ஐ] கட்சியும் கூட்டணி அமைக்க பேச்சு நடத்துவதாகவும்—

விடுதலைப்புலிகள் ஆதரவான மறுமலர்ச்சி தி. மு. கவுடன் கம்யூனிஸ்ட்கட்சி [மார்க்ஸிஸ்ட்] பேச்சு நடத்துவதாகவும் — தெரிவிக்கப்பட்டது. (இ-3)

# இறப்புப் பதிவுப் படிவம் இல்லை என்று கைவிரிப்பு

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இறந்தவர்களைப் பதிவு செய்வதற்கான படிவத்தை யாழ். மாவட்டத்தில் மக்கள் பெற முடியாதுள்ளது என அறிய வருகின்றது.

யாழ். மாவட்ட பிறப்பு, இறப்பு, விவாகம் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலகங்கள் ''ஆயுத பற்றில் இறந்தவர்களை பிரச்சினை செய்யும் (30 ஆம் பிரிவு) பதிவு பி-II'' படிவம் முடிந்து விட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-30)

# கமக்காரர் அறிமுக அட்டை புதுப்பிக்க வேண்டுகோள்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் ஒவ்வொரு செய்கையாளர்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ள கமக்காரர் அறிமுக அட்டைகள் 1996ஆம் ஆண்டு பயன்பாட்டிற்கென மீளப் புதுப்பித்தல் செய்யப்படவுள்ளன.

இவ் மீளப் புதுப்பித்தலுக்கான 1995 ஓகஸ்ட் 1தொடக்கம் 1996 யூலை 31 வரையான ஓராண்டு காலத்திற்கு செல்லுபடியாகக் கூடியவாறு 1995 ஓகஸ்ட் 1தொடக்கம் செப்ரெம்பர் 31வரை மீளப் புதுப்பித்தல் செய்து வழங்கப்படவுள்ளது.

மீளப் புதுப்பித்தலுக்கான விண்ணப்பப்படிவங்களை அவ்வப்பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினரிடம் பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவத்துடன் கமக்காரர் அறிமுக அட்டையினையும் இணைத்து மீண்டும் அதே பகுதி கிராமிய உற்பத்திக் குழுவினரிடம் சமர்ப்பித்தல்வேண்டும். மீளப் புதுப்பித்தல் விண்ணப்பப்படிவத்தில் குடும்பத் தலைவர், பின்னுரித்தாளர் என்போருக்கான பெயர் மாற்றம், இட மாற்றம், காணிப்பதிவு மாற்றங்கள் புதிதாக பெற்றுள்ள அல்லது காணிச் சொந்தக்காரர் / குத்தகையாளர் / முன்னைய செய்கையாளர் என்போரிடமிருந்து மீளப்பெற்ற காணி மாற்றப்பதிவுகள், வீட்டுத் தோட்டம் செய்கை பண்ணும் காணிப்பதிவுகள் என்பனவற்றை நிரப்பி மீளாய்வுக்குட்படுத்திக் கொள்ளலாம். எனவே மேற்படி மீளப் புதுப்பித்தல்களை உரிய நேரத்தில் செய்து கொள்ளுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுக் கொள்கிறது. (க)

வலி. மேற்கில்

# சகல குடும்பங்களுக்கும் இலவச உலர் உணவு வழங்கக் கோரிக்கை

வலிகாமம்மேற்கு, ஒக. 1

வலிகாமம் மேற்கு பிரதேசத்தில் உள்ள சகல குடும்பங்களும் இராணுவ நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டுள்ளனர். ஆதலினால் சகலருக்கும் ஒரு வாரத்துக்கான இலவச உலர் உணவு வழங்கப்பட வேண்டும்.

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. பொன்னம்பலத்திடம் இவ்வாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் திரு. கா. சந்திரராசா தலைமையில் அரசாங்க அதிபர் மற்றும் திணைக்களங்களின் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட கலந்துரையாடல் கூட்டம் ஒன்று கடந்த 27ஆம் திகதி பிற்பகல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலிலேயே கடுமையான ஷெல் தாக்குதல், புக்காரா விமானத் தாக்குதல் போற்கொள்ளப்பட்டமையினால் வட்டுக்கோட்டை, சங்கரத்தை, சித்தங்கேணி, சுளிபுரம் ஆகிய இடங்களில் தங்கியிருந்த சுமார் 2,500 குடும்பங்களுக்கும் இடம்பெயர்ந்து சென்று யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய இடங்களுக்கு சென்றவர்களுக்கு வழங்கப்படும் இலவச உலர் உணவு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அரசாங்க அதிபரிடம் கேட்கப்பட்டது. (க-175)

## நல்லூர் உற்சவ கால சிறப்பம்சம்

### நல்ல முடிவோடு கொடியேற்று

கொடியேறு மாவென்று கோரிநின்றார் எங்கள்
குறைதீரு மோவென்று கூவிவந்தார்
அடியார்கள் இடம்விட்டு அவலமுற்றார் துன்ப
அலைமோத ஊரெல்லாம் அலைந்துசென்றார்
வடிவேலா வாவென்று வரவழைத்தார் உந்தன்
வரம்வேண்டித் திருக்கோயில் வழிநிறைத்தார்
முடியாத மிடிதீர்த்து நல்லூரனே நல்ல
முடிவோடு கொடியேற்று முருகையனே!

— முருகனடியான்

### ஓம் முருகா! உய்விப்பாயே!

முருகாஉன் கொடியேற்றம் காண்பதற்காம்]
முழுமனதும் இசைந்துநின்றோம் முழுமையாக
வருவாயெம் துயர்தீர்ப்பாய் வள்ளிபங்கா
வான்துயரைப் போக்கிடுவாய் [வணங்குகின்றோம்
திருவாம்தம் மண்வளத்தைத் தீயோர் பங்கம்
செய்திடினும் சேர்த்திடுவாய் கடைக்கண்பார்வை
ஒருவாறுன் கொடியேற்றத் தருள்கிடைக்கும்
ஓர்ந்தனம்யாம் ஓம்முருகா உய்விப்பாயே.

— காரைநகர் எம், பி. அருளானந்தன்.

# நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு

ஈழத்து முருகன் திருத்தலங்களில் எழிலார்ந்த திருத்தலமாக எல்லோரையும் ஈர்க்கும் அருள்வளம் மிக்க ஆலயமாக விளங்குவது நல்லூர் முருகன் ஆலயம். இரண்டு வாயிற் கோபுரங்களும், நான்கு மணிக்கூட்டுக் கோபுரங்களும், நான்கு பக்கமும் படித்துறை அமைந்த தீர்த்தக் கேணியும், அகன்ற தேரோடும் வீதிகளும், ஆலயச் சூழலும் இத்திருத்தலத்திற்கு மெருகூட்டுகின்றன. இவை எல்லாவற்றுக்கும் மேலாக, அற்புதமான அபிடேக ஆராதனைகள் அனுதினமும் நடைபெறுவதாலும் ஆண்டில் திருவிழா பெருவிழாவாக இருபத்தேழு தினங்கள் நடைபெறுவதாலும் இங்கு தெய்வீக அலை வீசுவதை உணரலாம்.

ஆலயச் சூழல் மன அமைதியையும் சாந்தியையும் ஏற்படுத்துவதை எவரும் உணர்வர். எனவே முருகனது அருளாட்சி நிலவும் புண்ணிய சேத்திரம் இது எனலாம்.

அபிடேகக் கந்தனாக அலங்காரக் கந்தனாக விளங்கும் நல்லூர் முருகன அடியவர்களை கவர்ந்திழுத்து அருள் செய்வதில் முன்னிற்பவன். அழகுமிளிர் ஆலயமும் கருமமே கண்ணான ஆசாரம் மிக்க அர்ச்சகர்களும் காலந் தவறாத பூசை ஒழுங்கும் காட்சிக்கினிய திருவிழாக்களும் அடியவரின் தாய்மையும் பக்தியும் மெய்ப்பாடும் நல்லூரின் புகழை ஞானிலம் எங்கும் பரப்பியுள்ளன.

நல்லூரைக் கும்பிட்டு நீ பாடு. அதனால் நாட்டில் உள்ள பிணிகள் ஓடும் என்று யோகர் சுவாமிகள் பாடியிருப்பது நல்லூரின் பெருமைக்கு நற்சான்றாகும்

ஆடி அமாவாசைக்கு ஆறாம் நாள் நல்லூர் ஆலய காண்டாமணியின் நாதம் கணீர் கணீர் என்று விசேடமாக காதில் விழுகின்றது. ஒரு குறிப்பிட்ட சுற்று வட்டத்துள் வசிக்கும் மக்களை வரவழைக்கும் ஒலி இதுவாகும். ஆம் அது அழகுடன் முருகனின் ஆண்டு மகோற்சவம் ஆரம்பமாவதை அறிவுறுத்துவதாகும். கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் வருடாந்த மகோற்சவம் இருபத்தைந்து தினங்கள் நடைபெற்று ஆவணி அமாவாசையில் தீர்த்த உற்சவத்துடன் நிறைவுறும் கொடியேற்றத் திருவிழா, மஞ்சத் திருவிழா, திருக்கார்த்திகைத் திருவிழா, கைலாயவாகனத் திருவிழா, மாம்பழத் திருவிழா, தேர்த் திருவிழா, தீர்த்தத் திருவிழா என்பன சிறப்புடையன.

நல்லூர் முருகனுக்கு உற்சவம் ஆரம்பித்துவிட்டால் யாழ்ப்பாண நகரமே விழாக் கோலம் பூண்டுவிடும். பந்தல்கள், தாகசாந்தி நிலையங்கள், இசையரங்குகள் கதாப்பிரசங்கிகள், பஜனைக் கோஷ்டிகள், காவடிகள் யாவும் தெருவெங்கும் நிறைந்து ஒருவித பக்திப் பரவச நிலை காணப்படும்.

முருகனின் திருவிழா என இதனைக் கூறுவதிலும் பார்க்க யாழ்ப்பாணத்தவரின் சமூக விழா என்று இதனைக் கூறலாம். திருவிழாக் காலத்தில் எல்லா வீதிகளும் நல்லூருக்கே இட்டுச் செல்லும் தெருவெல்லாம் அடியார் கூட்டம் அலை மோதும்.

பக்தியுடன் மகிழ்ச்சியையும் தருவதில் நல்லூர் திருவிழாக் காலம் முதலிடம் வகிக்கின்றது.

அல்லல் தீர்க்கும் நல்லைக்
கந்தனை அனுதினமும்
அல்லும் பகலும் நினைந்து
நினைந்து அழுமுருகா
செல்வா குமரா செவ்வேள்
முருகா என இறைஞ்ச
பொல்லா வினைகள்
போயகன்று பொடிபடுமே!

- வாசுகி சிவராமலிங்கம் -

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லின இறைச்சி சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு, S. வெல்லி, உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன், மல்வம் வீதியூடாக, சிங்கம் வீதி, உடுவில். (37794)

### தேவை

சில்லறைக் கடைக்கு முன் அனுபவம் உள்ள பையன்கள் தேவை. மாநகர எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும். நற்சான்றிதழ்களுடன் நேரில் வரவும் இல. 734, காங்கேசன்துறை வீதி, சிவலிங்கப் புளியடி. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (37785)

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹோர்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்டி லைன் இன்டஸ்ரீஸ் (தனி) லிமிட்டட், 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (சி-1967)

வெற்று பரல்கள் (மண்எண்ணெய்) மொத்தமாகவும், சில்லறையாகவும் தேவை. இருப்பவர்கள் உடன் எம்முடன் தொடர்புகொள்ளவும். அன்னக்கிளி தேநீர்ச் சாலை, [கச்சேரி முன்பாக] கண்டி வீதி, யாழ்ப்பாணம். (37799)

புதிய அல்லது நல்ல நிலையில் உள்ள "ரூ இன்வன்" (Two-in-One) றேடியோக்கள் தேவை. தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: உதயன் பணிமனை, இல. 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

அஸ்பெஸ்டஸ் கூரை தகடுகள், பனை மரங்கள், சலாகைகள் உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: உதயன் பணிமனை 292/2, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## மக்கள் உணவகம்

சுழிபுரம், ஓக. 1

மக்கள் மலிவான விலையில் உணவுகளை பெற்றுக் கொள்வதற்காக வழக்கம்பரையில் சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் "மக்கள் உணவகம்" ஒன்றைத் திறந்துள்ளது. பண்ணாகம் கிளை 5 இன் அனுசரணையுடன் இக்கிளை திறக்கப்பட்டுள்ளது. (க-28)

# இடைக்கால நிர்வாக சபை உறுதியான முடிவு இல்லை

கொழும்பு, ஓக 1

வடக்கு-கிழக்கு மாகாணத்துக்கான இடைக்கால நிர்வாக சபையை அமைக்க ஸ்ரீலங்கா அரசு கால அவகாசம் கோரியுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டத்தை வெளியிடவும் —

அத்துடன் இடைக்கால நிர்வாக சபை அமைப்பது தொடர்பான அறிவிப்பை வெளியிடவும் — அரசு முயற்சி எடுத்திருந்தது.

இடைக்கால நிர்வாக சபை அமைப்பதில் ஏற்பட்டுள்ள நெருக்கடியான நிலையை படுத்து அது தொடர்பான இறுதி முடிவை வெளியிட கால அவகாசம் வழங்குமாறு அரசு தமிழ்க்கட்சிகளிடம் கேட்டுள்ளது.

தமிழ் கட்சிகளில் தமிழர் விடுதலைக் கூட்டணி தவிர்ந்த ஏனைய தமிழ் கட்சிகள் இடைக்கால நிர்வாக சபை திட்டத்தை வரவேற்றுள்ளன. (இ-3)

## செக்கு ஆலை திறப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1

எள்ளு உற்பத்தி மேம்பாடு பகுதி மன்னார் மாவட்டம் சோலைக் கிராமத்தில் எண்ணெய் செக்கு ஆலை ஒன்றை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கைத்தொழில் பகுதியினர் அண்மையில் திறந்துள்ளனர். (க)

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 21 – 04 – 1924

மறைவு: 11 – 08 – 1994

திருவாட்டி
பாக்கியம் செல்லத்துரை

திதி: 01 – 08 – 1995

தாயாகித் தந்தையாய் எங்களை ஆளாக்கி
தனிவழி விட்டே சென்றதேனம்மா
காயாகி கனியாகும் பருவத்திலெம்மை
கலங்கிட விட்டே சென்றதேனம்மா.

ஆண்மகனோடு பெண்கள் மூவரையும்
ஆசைகாட்டி அரவணைத்து வளர்த்தீர்கள்
அன்பு அண்ணாவை அருமை அக்காவை
அயல்நாடு அனுப்பி மகிழ வைத்தீர்கள்
கொள்ளை இன்பம் குலவும் ஈழ
கோயில் சிதம்பரேசன் தாள்களில்
வெள்ளை உள்ளத்தோடு சரணடைந்து
வீடு பேறடைய வேண்டி நிற்கின்றோம்
ஓம் சாந்தி!

செல்வி. செ. தனலட்சுமி,
செல்வி. செ. வசுந்தரா.

"அன்னை நிழல்",
செட்டியாமடம்,
வட்டுக்கோட்டை.

[37777]

# ST. PATRICK'S COLLEGE JAFFNA.

**To the attention of students of Yrs. 9, 11 & 12 (1st year):**

Those students of Yr. 12 wishing to reappear for O/L exam are asked to report at the office at 9 a.m. on Thursday, 03 - 08 - 1995. All students of Yrs 9 & 11 must report at the office at 9 a.m. on Friday, 04 - 08 - 1995 to sign the application forms.

**– RECTOR**

[C/1970]

## வேலணை, பெருங்குளம்
## ஸ்ரீ முத்துமாரி அம்மன்
## தேவஸ்தானம்

வருடாந்த மஹோற்சவ தினத்தையொட்டி
தேர்த்திருவிழா தினமாகிய

**09 – 08 – 95 புதன்கிழமை**

**வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன்**
ஆலயத்தில் விசேஷ அபிஷேகம் நடைபெறவுள்ளது.

திருவிழா உபயகாரர், அடியவர்கள் பரிபாலன சபையினருடன் தொடர்பு கொள்ளும்படி அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.

— பரிபாலன சபையினர்

[37811]

# இரங்கல் கூட்டம்



## செல்வி ஜெயதா நவரட்ணம்

[3ஆம் வருட உயிரியல் விஞ்ஞான பீட மாணவி]

மலர்வு: 25 – 01 – 1971

உதிர்வு: 10 – 07 – 1995

அன்னாரது பிரிவையொட்டி நிகழும் இரங்கற் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் அனைவரையும் வேண்டுகின்றோம்.

காலம்: 01 - 08 - 1995 செவ்வாய்க்கிழமை
மாலை 4-00 மணி

இடம்: இரசாயனவியல் விரிவுரை
மண்டபம் [C. L.]

(37809) — விஞ்ஞானபீட மாணவர்கள்.

# யாழ். மத்திய கல்லூரி நிறுவுநர் நாள்

## 1816 ஆவணி ஒன்று 1995

# 179 ஆவது ஆண்டு நிறைவு

"உத்தம மாணவர் உன்னத பணியால்
மத்தியம் என்றும் நித்தியம் வாழ்க!"

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம்.

(சி-1968)

# உதயன்

292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்


## அளப்பரிய உதவி

கடந்த மாதம் இரண்டாவது வாரத்தில் வலிகாமம் மேற்கு, வலிகாமம் வடக்குப் பிரதேசங்களில் இராணுவத்தினர் மேற்கொண்ட ''முன்னேறிப் பாய்தல்'' தாக்குதல் நடவடிக்கை பெரும் உயிர், உடைமைச் சேதங்களை உருவாக்கியது இப்போது உலகம் அறிந்த விடயமாயிற்று.

அந்த ஒரு வாரகாலத்தில் சுமார் மூன்று லட்சம் மக்கள் எதுவுமற்ற ஏதிலிகளாக உடுத்த உடையுடன் தமது வீடு வாசல்களைவிட்டு இடம்பெயர்ந்தனர்.

இராணுவத்தினரின் படுகொலையில் இருந்து தப்புவது என்ற நோக்கத்துடன், உயிரைக் காப்பாற்றினால் போதும் என்ற கடைசி நிலையிலேயே அவர்கள் இடம்பெயர்ந்தார்கள். ஆண்டாண்டு காலமாக இரத்தத்தை வியர்வையாக்கி கடுமையாக உழைத்துத் தேடிய உடைமைகளை — தங்கள் முழு வாழ்க்கையினதும் சேமிப்பான உடைமைகளை — விட்டு விட்டு ஓடி வந்தார்கள்.

மரணத்தின்போது உலக சம்பத்துக்கள் அனைத்தையும் மனிதன் விட்டுச் செல்வது போல, இடம்பெயர்ந்தவர்களும் ஓட்டாண்டிகளாகவே தமது வீட்டுப் படலைகளைத் தாண்டிக் காலை வைத்தார்கள்.

ஆயினும் சகோதரத் தமிழர்கள் அவர்களை அரவணைக்கும் கரங்களாக மாறி வேண்டிய உதவிகளைச் செய்தார்கள். தமது வாழ்க்கையின் கடமையாக, சமூகக் கடமையாகக் கருதி உதவினார்கள்.

இத்தளவு பெரும் எண்ணிக்கையான மக்கள் ஒரே நேரத்தில் இடம்பெயரும் போது அவர்களுக்கு உணவு, உறையுள், உடை என்பன அளித்து பராமரிப்பது பெரும் பாரமான பொறுப்பாகும். சுகாதார வசதி அளித்து நோய் நொடிகளிலிருந்து காப்பாற்றுவது எல்லாவற்றையும் விட கஷ்டமான பணி.

ஆனால் இவை யாவும் சிரமமான காரியங்களாகத் தென்படாத விதத்தில், இடம்பெயர்ந்து ஏதிலிகளாக வந்த மக்கள் பராமரிக்கப்பட்டார்கள். இந்த மிகப் பெரிய பொறுப்பில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் முன்னின்று உழைத்தது. அதற்கு உறுதுணையாக ஏனைய அரசசார்பற்ற நிறுவனத்தினர், அரசாங்கப் பணியுடன் சம்பந்தப்பட்ட அலகினர், பொது அமைப்புகள், பரோபகாரிகள், தனியார் நிறுவனத்தினர், தனிப்பட்ட நலன் விரும்பிகள், தங்கள் வளங்களைப் பயன்படுத்திப் பேருதவி புரிந்தனர்.

இவர்கள் யாவரும் தமக்குரிய சமூகக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றி நொந்துபோன தமது சகோதரர்களுக்கு உதவியமை பாராட்டுக்குரியதாகும்.

தமிழர்கள் எல்லோருமே ''அகதிப் பொதி''யை தயார் செய்து வைத்திருக்க வேண்டிய அட்டூழியமான, அவலமான நிலையைச் சிங்கள அரசாங்கம் உருவாக்கியுள்ளது. எந்தத் தமிழனும் எந்த வேளையும் இடம்பெயர நேரிடலாம் என்ற சூழ்நிலையில் ஏதிலிகளை பராமரிப்பதில் இம்முறை ஒருங்கிணைந்த உதவி பெருவெற்றி அளித்திருக்கிறது.

எனினும், தமிழன் தனது சொந்தத் தாயகத்திலேயே இடம் பெயரும் அவலத்தை நிறுத்த ஒவ்வொருவரும் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்தும் ஆழமாகச் சிந்தித்துக் கூர்மையாகச் செயற்பட வேண்டும்.

அரசுக் கட்சிகளிடையே

# கருத்து ஒற்றுமை ஏற்பட்டாலே ஐ.தே.க. தீர்வைப் பரிசீலிக்கும்

கொழும்பு, ஓக. 1

பொது மக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகள் மத்தியில் ஒத்த கருத்து ஏற்பட்டு, தமிழ், முஸ்லிம் கட்சிகளுக்கிடையில் உடன்பாடு ஏற்பட்ட பின்னரே அரசாங்கத்தின் அரசியல் தீர்வு யோசனைகளை ஐக்கிய தேசியக் கட்சி பரிசீலிக்கும்.

மேற்கண்டவாறு ஐக்கிய தேசியக் கட்சித் தவிசாளர் ஏ. சி. எஸ். ஹமீத் கூறினார்.

கடந்த காலத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செய்தது போன்று இந்த விஷயத்தில் ஐ. தே. க. அரசியல் விளையாட்டில் ஈடுபடமாட்டாது என்றும் ஹமீத் தெரிவித்தார்.

அரசியல் தீர்வு யோசனைகள் குறித்து, அரசாங்கம் ஐ. தே. கவுக்கு உத்தியோகபூர்வமாக இன்னும் அறிவிக்கவில்லை. ஆனால் அதைப் பரிசீலித்து தக்க சமயத்தில் தனது அபிப்பிராயத்தை ஐ. தே. க. வெளியிடும் என்று எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கூறினார்.

அரசியல் தீர்வை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாளை மறுதினம் வியாழக்கிழமை ஐக்கிய தேசியக் கட்சியுடன் கலந்தாலோசிப்பார்.

தீர்வு சட்டமாவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும் மக்களின் சர்வஜன வாக்கெடுப்பு அங்கீகாரமும் தேவை.

அமைச்சரவை இன்னமும் அரசியல் தீர்வை உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கவில்லை.

தான் இன்னமும் உத்தியோகபூர்வ நகலை வாசிக்கவில்லை எனவும், ஆகவே அது பற்றி அபிப்பிராயம் சொல்ல முடியாதிருக்கிறது எனவும் விஞ்ஞான தொழில் நுட்ப மனிதவள அபிவிருத்தி அமைச்சர் பேர்னாட் சொய்சா கூறியுள்ளார்.

ஜ ஐ தே. மு

உத்தேச அரசியல் தீர்வு நடைமுறைக்கு வந்தால் நாடாளுமன்றம் மதிப்பிழந்து பலவீனமாகிவிடும். இது மிகவும் மோசமானது. ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் (லலித்பிரிவு) பேச்சாளரான ரவி கருணநாயக கூறினார்.

ஆனால் இத் தீர்வு பெரும்பான்மை சிங்கள மக்களுக்கும் சிறுபான்மை தமிழ், முஸ்லிம், பறங்கி இன சமூகங்களுக்கும் ஏற்றுக் கொள்ளக் கூடியதாக அமையும் என்றால் பொது மக்கள் ஐக்கிய முன்னணியில் பொறுப்புள்ளதோர் கட்சி என்ற முறையில் தாமும் அதை ஏற்றுக் கொள்ளத் தயார் என்று அவர் கூறினார்.

இருப்பினும், நிறைவேற்று ஜனாதிபதி முறையை ரத்து செய்தல், ஒற்றையாட்சியைப் பாதுகாத்தல், எல்லைகளை மீளமைத்தல் ஆகியவற்றுக்கு தனித்தனியான சர்வஜன வாக்கெடுப்பில் அங்கீகாரம் பெறப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார்.

முஸ்லிம் காங்.

அதிகாரத்தைப் பங்கிட துணிகரமான முற்போக்கான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கின்றது என்பதை உத்தேசத் தீர்வு காட்டுகின்றது என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொதுச் செயலாளர் றவூவ் ஹக்கீம் தெரிவித்தார்.

ஈ.பி.ஆர். எல். எவ்.

ஈ. பி. ஆர். எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தீர்வில் உள்ள யோசனைகள் குறித்து தனது கட்சி மகிழ்ச்சி அடைவதாகவும் ஆனால் வடக்கு — கிழக்கில் மூன்று சபைகளை அமைப்பது கபடத்தனமானது என்றும் கூறினார்.

மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனாவும் முன்னாள் அமைச்சர் காமினி ஜயசூரியாவும் தீர்வைக் கண்டித்து இது நாசகரமானது என்று கூறினார்கள். (இ-க)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறை விரிவுரையாளர் கலாநிதி கா. குகபாலனின் ''குடித் தொகை கோட்பாடுகளும் பிரயோகங்களும்'' என்ற நூலின் வெளியீடு நாளை புதன்கிழமை முற்பகல் 10-30 மணிக்கு புவியற்றுறை மண்டபத்தில் நடைபெறும். [க]

## விசேட அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 1

யாழ்ப்பாணம், நீவகம் ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்கு உட்பட்ட சகலவங்கிகள், கூட்டுறவுச் சங்கங்கள், சனசமூக நிலையங்கள், கிராம/ மாதர் அபிவிருத்திச் சங்கங்கள், விளையாட்டுக் கழகங்கள், ஏனைய பொது அமைப்புகள், மன்றங்கள் என்பவற்றைச் சேர்ந்த சகல தரங்களிலுமான பணியாளர்களையும், பிரதிநிதிகளையும் நாளை முற்பகல் 10.00 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர்மன்ற மண்டபத்தில் நடைபெறஉள்ள விசேட கலந்துரையாடலிலும்,—

மேற்படி, பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட சகல அரச திணைக்களங்கள், அதிகார சபைகள், கூட்டுத்தாபனங்கள், அரச பணிமனைகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றைச் சேர்ந்த சகல தரங்களிலுமான அனைத்துப் பணியாளர்களையும்/ பிரதிநிதிகளையும் நாளை 2-8-95 பி. ப. 3.00மணிக்கு நடைபெறஉள்ள கலந்துரையாடலிலும்— தவறாது அவசியம் சமுகமளிக்குமாறு தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் அறிவித்துள்ளார். [இ]

## விவசாய கல்லூரி பரீட்சை

யாழ்ப்பாணம், ஓக. 1

இலங்கை விவசாயக் கல்லூரிகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் 13 ஆம் திகதி வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெறும் என விவசாயப் பணிப்பாளர் நாயகம் யாழ். செயலகத்துக்கு அறிவித்துள்ளார்.

கடந்த முதலாம் திகதி நடைபெறவிருந்த இப் பரீட்சை பின்னர் ஒத்திவைக்கப்பட்டது.

ஏற்கனவே பரீட்சார்த்திகளுக்கு அனுப்பப்பட்ட அனுமதி அட்டைகள் இப்பரீட்சைக்குச் செல்லுபடியாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஜ)

## வவுனியா வைத்திய சேவை ஸ்தம்பிக்கும் அபாய நிலை

வவுனியா, ஓக. 1

வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு மருந்துகள் அனுப்புவது நிறுத்தப்பட்டிருப்பதால், இந்த வைத்தியசாலையின் பணிகள் ஸ்தம்பிதமடையும் அபாயம் உருவாகியுள்ளது.

நோய்த்தடுப்பு மருந்துகள், இரத்தப் பரிசோதனைக்கான இரசாயன மருந்துகள், சிறுநீர் சோதனை மருந்துகள் உட்பட அனைத்து மருந்து வகைகளின் கையிருப்புகளும் முடிவடைந்துவிட்டதால், இன்னும் சில நாட்களுக்கே வவுனியா வைத்திய சாலை இயங்க முடியும் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கூட்டுப்படை தலைமையகத்தின் முன் அனுமதியின்றி வவுனியாவுக்கு மருந்துப் பொருள்களை கொண்டு செல்ல முடியாது என அறிவிக்கப்பட்டிருப்பதாலேயே வவுனியா ஆஸ்பத்திரிக்கு இத்தகைய இக்கட்டான நிலைமை ஏற்பட்டுள்ளது.

இரு மாதங்களுக்கு முன்னர் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தில், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெற்றே, வவுனியாவுக்கு மருந்து எடுத்துவர முடியும் என அறிவுறுத்தப்பட்டிருந்தது இதனை அடுத்து இவ்வைத்தியசாலைக்கு மருந்துகளை அனுப்புவது நிறுத்தப்பட்டுள்ளது. [ஓ]

## கப்பூது பாதை அமைப்பு

யாழ்ப்பாணம், ஓக. 1

வடமராட்சி மக்களினது நன்மை கருதிகப்பூது, வெல்வன் கிராய் இணைப்பு வீதியை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன கிராமிய உற்பத்திக்குழுப்பகுதியினர் மக்களின் உதவியுடன் அமைத்துவருகின்றனர்.

கரும்புலிகள் தினத்தன்று தொடக்கம் சிரமதான மூலம் செய்யப்படும் இவ்வேலையில் தற்போது முக்கால்மயில் நீளமான வீதிவேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

இப்பகுதி மக்களின் அயராத உழைப்பாலும் இழுவைநொறிவாகன உரிமையாளர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொள்ளப்பட்டுவரும் இவ்வீதி அமைப்பு வேலையின் ஆரம்ப நிகழ்வில் தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்பாளர், வர்த்தகசங்க செயலாளர், நிறுவன வட்டத் தொடர்பாளர் ஆகியோர் பங்கு கொண்டனர்.

வல்லைப் பாலத்தினூடாக பயணிகள் போக்குவரத்துக்கள் பாதிக்கப்படும் காலங்களில் மாற்றுப்பாதையாகப் பாவிக்கப்படும் இப்பாதையை முழுமையாக அமைத்து முடிப்பதற்கான முயற்சிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. [ஓ]

## ஆலயங்களில்

வதிரி பூவற்கரைப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று 1 ஆம் திகதி ஆரம்பமாகி 10 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும். மகேசுர பூசை 13 ஆம் திகதி நடைபெறும். (க)

★ ★ ★

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத்திட்டம்—துர்க்காபுரம் ஸ்ரீ ஞான துர்க்கை அம்பாள் ஆலய அலங்கார உற்சவம் இன்று 1ஆம் திகதி ஆரம்பமாகி 10 ஆம் திகதி தீர்த்த உற்சவத்துடன் முடிவடையும். (க)

★ ★ ★

தாவடி ஸ்ரீ அம்பலவாணகந்தசுவாமி [முருகமூர்த்தி] கோயில் மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11-30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

தேர்த்திருவிழா எதிர் வரும் 9 ஆம் திகதியும் மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். [ஜ]

★ ★ ★

எழுதுமட்டுவாள் விழுபளை ஸ்ரீ மீனாட்சி (கண்ணகை) அம்மன் கோவில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 9 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம் பெறும். (ஜ)

# போரில் பேரழிவுகள் ஏற்படினும் நாம் வெற்றி பெற்றே தீருவோம்

## நிர்வாக சேவை பொறுப்பாளர் டொமினிக் உரை

சுழிபுரம், ஓக. 1

''தந்தை செல்வா முன் வைத்த தமிழீழப் பிரகடனத்தை அடையவே நாம் ஆயுதம் தாங்கிய போராட்டத்தை நடத்துகின்றோம். இதில் பேர் அழிவுகள் வரும் என்பது தெரிந்த விடயம்; உலக வரலாறு காட்டும் உண்மை. எனினும் நாம் வெற்றிபெற்றே தீருவோம்''.

கடந்த 26ஆம் திகதி சுழிபுரம் நாவலர் சனசமூக நிலைய முன்றிலில் நடைபெற்ற போர்க்கால சூழ்நிலை பற்றிய கருத்தரங்கில் உரையாற்றியபோது யாழ். மாவட்ட நிர்வாக சேவை பொறுப்பாளர் டொமினிக் இவ்வாறு குறிப்பிட்டார்.

திரு. டொமினிக் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

எங்கள் மண்ணில் நடப்பவை புதினமானவை அல்ல. உலக நாடுகளில் நடைபெறும் அரசியல் போராட்டங்களில் எல்லாம் உயிர்ச்சேதம், பொருள்சேதம் மற்றும் அழிவுகள் ஏற்படுவதை நாம் அறிவோம்.

இரத்தம் சிந்தாமல் விடுதலையைப் பெற்றுக் கொள்ள முடியாது. பொது மக்கள் அடையும் துன்பங்களிலும் பார்க்கத் தமது உயிரைத் துச்சமாகமதித்துப் போராடும் இளைஞர்களையும் யுவதிகளையும் நாம் மறந்துவிடக் கூடாது. இவ்வேளையில் மக்கள் யாவரும் எம்முடன் இணைந்து போராடி எதிரியைப் பலவீனப்படுத்த முன்வரவேண்டும் இன்றேல் மேலும் பல அழிவுகளை மக்கள் எதிர்கொள்ள வேண்டி வரும்

இந்த மண்ணில் நிலை கொள்ளும் எதிரியை விரட்டியடிக்கும் வரை எமது போராட்டம் ஓயப்போவது இல்லை எனவும் திரு டொமினிக் கூறினார்.

உரை முடிவில் போராட்டப் படக் காட்சி காண்பிக்கப்பட்டது. (க-28)

# அரசின் தீர்வுத் திட்டம் நாட்டைப் பிரிக்கும் சதி!

## தேசிய மீட்பு முன்னணி எச்சரிக்கை

கொழும்பு, ஓ 1

அரசின் உத்தேச தீர்வுத் திட்டம் நாட்டைப் பிரிப்பதற்கான சதி என்றும் — சிங்கள மக்களைக் காட்டிக் கொடுக்கும் செயல் எனவும் ஜே. வி. பியின் ஒரு பிரிவான தேசிய மீட்பு முன்னணி தெரிவித்துள்ளது.

அரசின் உத்தேச திட்டம் அமுல்ப் படுத்தப்படுவதற்கு முன் அதுபற்றி மக்கள் மத்தியில் கருத்துக் கணிப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் தேசிய மீட்பு முன்னணி விடுத்துள்ள ஓர் அறிக்கையில் கோரிக்கை விடுத்துள்ளது. [ஐ-4-6]

## நல்லூர் சூழலில்

நல்லூர் உற்சவ கால நிகழ்ச்சிகளில் நாவலர் மணி மண்டப முன்றிலில் தெய்வீகத் தமிழிசை அரங்கில் —

இன்று மாலை 6 மணி முதல் 7-30 மணிவரை கே. ஆர். சுந்தரமூர்த்தி குழுவினரின் மங்கள இசை.

இரவு 7-30 மணி முதல் 9 மணிவரை எஸ். கணேசசுந்தரம் நிகழ்த்தும் கதாகலாட்சேபம். [அ-111]

### அரிசி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மொத்த விலையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இன்று முதல் குத்தரிசியின் ஆகக் கூடிய சில்லறை விலை 30 ரூபாவாக வரையறுக்கப் பட்டுள்ளது என்பதை நுகர்வோருக்கு அறியத்தருகின்றோம். இவ் விலை மாற்றத்தை கருத்திற் கொண்டு அரிசியை விற்பனை செய்யுமாறு அனைத்து வாணிபர்களையும் நிதித் துறையினர் தயவாக வேண்டுகின்றனர்.

பல நோக்கு கூட்டுறவு சங்கங்களில் குத்தரிசியின் ஆகக் கூடிய சில்லறை விலை 29 ரூபா 50 சதமாக வரையறை செய்யப்பட்டுள்ளது — என்று அறிவிக்கப்பட்டது. (ஒ)

## 16 பேர் கைது

வடபகுதிக்கு கொண்டு செல்ல தடைசெய்யப்பட்ட ஓட்டு வேலைக்குப் பயன்படுத்தப்படும் வெல்டிங் கம்பிக் கூர்களை எடுத்துச் சென்றதாக 16 பேர் தாண்டிக்குளம் தடைமுகாமில் கடந்த வியாழனன்று கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, வடபகுதியில் இருந்து வவுனியா வந்த சசிகரன் [17 வயது] என்ற வாலிபரும் கைது செய்யப்பட்டுள்ளார். (ஓ)

### அரசை....

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களிலும் வாவிகளிலும் போடப்படுகிறார்கள் என்பதை அரசாங்கக் கட்சியினர் ஏற்றுக் கொண்டுள்ளனர்.

இக்கொலைகள் பற்றிய விவரங்கள் அரசுக்குக் கிடைக்கு முன்னரே அவை பற்றி சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகளுக்கு அறிவிக்கப்படுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

சில சக்திகள் தமிழர்களை கடத்திச்சென்று கொன்று பின்னர் அவர்களது சடலங்களை ஆறுகளிலும் வாவிகளிலும் போட்டுவிட்டு அது பற்றி மனித உரிமை அமைப்புகளுக்கு அறிவிப்பதாகக் கூறப்படுகிறது.

ஊழல், லஞ்சம் முதலிய குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ள பிரமுகர்கள் தற்போது குழப்பமடைந்த நிலையில் காணப்படுகிறார்கள் எனவும், இவர்களின் முன்னைய அரசைச் சேர்ந்த அரசியல்வாதிகளும், பல அரச திணைக்களங்களைச் சேர்ந்த முக்கிய அதிகாரிகளும் முப்படைகளையும் பொலீஸையும் சேர்ந்த அதிகாரிகளும் அடங்குவர் எனவும் கூறப்படுகிறது. [ஒ-10]

### உத்தேச....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாக இணைப்பதனைதான் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை என்று தெரிவித்துள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதி முறையை முதலில் ஒழிக்க வேண்டும் என்றும் —

அதற்கு முதல் இனப்பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தைச் சேர்க்கும் விதத்தில் அரசமைப்பு மாற்றம் கொண்டு வரப்படக்கூடாது என்றும் — சமசமாஜக் கட்சி கூறியுள்ளது.

*முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தி*

முஸ்லிம்களுக்கெனத் தனியான நிர்வாக அலகு அமைக்கப்படும் என்று ஜனாதிபதி உறுதி அளித்திருந்த போதிலும், உத்தேச தீர்வுத் திட்டத்தில் அது குறித்துப் பிரஸ்தாபிக்கப்படாமையால் முஸ்லிம் காங்கிரஸ் அதிருப்தி கொண்டுள்ளது

உத்தேச தீர்வுத் திட்டம் அமைச்சரவையில் விவாதிக்கப்படுவதற்கு முன்னர் தொடர்பு சாதனங்களுக்கு அது கிடைத்தது குறித்தும் அமைச்சர்களும், அரசாங்கத்தின் அங்கத்துவக் கட்சிகளும் அதிர்ச்சியும், ஆத்திரமும் அடைந்திருப்பதாகவும் அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அடிமட்ட அரசியல்வாதிகளைப் புறக்கணித்து விட்டு, தேசியப் பட்டியல் மூலம் நுழைந்த பேராசிரியர் ஜி. எல். பீரிஸும், நீலன் திருச்செல்வமும், லக்ஷ்மன் கதிர்காமரும் சேர்ந்து இந்தத் தீர்வுத் திட்டத்தைத் தயாரித்தது குறித்தும் அரசாங்கத்திற்குள்ளே பெரும் புழுங்கல் நிலை உருவாகியுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# யாழ். ஆஸ்பத்திரியில் செப்ரிசீமியா மரணங்கள்

யாழ். ஆஸ்பத்திரியில் மீண்டும் செப்ரிசீமியா மரணங்கள் அதிகரித்து வருகின்றன.

நேற்றும், நேற்று முன்தினமும் இரு குழந்தைகள் செப்ரிசீமியா ஏற்பட்டு உயிரிழந்தன.

காய்ச்சல் காரணமாக அனுமதிக்கப்பட்ட மாங்குளத்தைச் சேர்ந்த கருணாநிதி தினேஸ் [வயது 4] அராலி கிழக்கைச் சேர்ந்த யோகச்சந்திரன் விசித்திரா (வயது 9 மாதம்) ஆகிய இரு குழந்தைகளுமே உயிரிழந்தன. (ஐ-13-15)

# ஜி. சீ. ஈ. பரீட்சை நேற்று சுமுகமாக ஆரம்பமானது

ஜி. சீ. ஈ. [உயர்தரப்] பரீட்சை யாழ். மாவட்டத்தில் நேற்று சுமுகமாக ஆரம்பமாகி நடைபெற்றதாக யாழ். வலயம் ஒன்றின் கல்விப் பணிப்பாளர் நேற்று மாலை தெரிவித்தார்.

முதல் தொகுதியில் எடுத்து வரப்பட்டுள்ள வினாத்தாள்கள் முதல் ஆறு நாட்களுக்கும் உரியவை என்றும்—

இன்னும் இரண்டு தொகுதிகளாக வினாத்தாள்கள் எடுத்துவரப்பட உள்ளன என்றும் —

வினாத்தாள்களை இங்கு எடுத்து வருவதற்கான நடவடிக்கைகளை பரீட்சை ஆணையாளர் மேற்கொள்வார் என்றும் — கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-4)

# இன விடுதலைக்காக இளைஞர் அணி திரள்க!

## நினைவுக் கூட்டத்தில் உரை

எமது இனம் சுதந்திரமாக வாழ இளைஞர்கள் எம்முடன் வந்துசேர்ந்து எதிரியை விரட்டி அடிக்க உதவ வேண்டும்.

நாம் அநியாயமாக இறக்காமல் எதிரியை அடித்து விரட்டி நிம்மதியாக எமது மண்ணில் வாழ வேண்டும்.

லெப் செல்லக்கிளி அம்மானின் 12ஆவது நினைவு நாள் கூட்டத்தில் பேசிய தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு தேவர் அண்ணா இவ்வாறு கூறினார்

நல்லூர் வட்ட மகளிர் பொறுப்பாளர் செல்வி கௌசி தலைமையில் நல்லூர் வட்டவையின் சார்பில் திருநெல்வேலி கிழக்கு வாலையம்மன் சனசமூக நிலைய முன்றிலில் மேற்படி கூட்டம் நடைபெற்றது.

திரு. தேவர் அண்ணா மேலும் பேசும் போது கூறியதாவது!

தமிழ் மண்ணில் சிங்கள இராணுவம் இருக்கும் வரை துன்பங்களும் துயரங்களும் தொடரும். புத்தபிக்குகளும் சிங்களவர்களும் எம்மை அழிக்க ஸ்ரீலங்கா அரசுக்கு நிதியுதவிகளை வழங்குகிறார்கள். ஆயுத பலம் குறைந்திருந்தபோதும் எங்கள் தேசியத் தலைவரின் மதிநுட்பமான சிறந்த வழி காட்டலினால் செல்லக்கிளி அம்மான் போன்ற ஆரம்பகால உறுப்பினர்கள் பலர் சிங்கள இராணுவத்தைச் சிதறடித்துள்ளனர். எமது சமுதாயம் இங்கு நிம்மதியாக வாழ மூச்சுவிட ஆரம்பகால உறுப்பினர்களே காரணம்.

இப்போது இந்த மண்ணில் நடைபெறும் நிகழ்வுகளை சற்றுச் சிந்தியுங்கள். மீண்டும் மீண்டும் நாம் அகதிகளாக கோயில்களிலும், பாடசாலைகளிலும் தஞ்சமடைந்தபடி வாழ்வதா?

இவ்வாறு அவர் கூறினார்.

வலிகாமம் மகளிர் மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் செல்வி இளவதனி பேசும் போது அடிமையாக வாழாது நாம் சுதந்திரமாக மண்ணை ஆளவேண்டும். அதற்காகவே செல்லக்கிளி அம்மான் என்ற வீரன் தனது வாழ்க்கையை அர்ப்பணித்தான். அந்த வீரனை நினைத்து நாம் பெருமைப்படவேண்டும். அவருக்கு இருந்த வீரம் இந்த மண் கொடுத்த வீரம். என்றார்.

வலிகாமம் அரசியல்துறை பொறுப்பாளர் திரு. எழிலன், அரசியல் பயிற்சிப் பொறுப்பாளர் திரு. மனோ அண்ணன் ஆகியோரும் பேசினார்கள்.

கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (க-111)

### நியூஸிலாந்தில்..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நியூஸிலாந்து அரசு உதவிகளை வழங்கவேண்டும் என்று பேரணியில் கலந்து கொண்டோர் வலியுறுத்தினர்.

ஸ்ரீலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கு எதிரான சுலோக அட்டைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

ஒக்லண்ட் நகரின் அயோட்டா மண்டபத்தை பேரணி சென்றடைந்ததும் அங்கு கூட்டம் ஒன்றும் நடைபெற்றது.

இந்தப் பேரணி அந்நாட்டின் தொலைக்காட்சிச் செய்தியில் ஒளிபரப்பப்பட்டது. பேரணி பற்றிய செய்திகள் அங்குள்ள பத்திரிகைகளில் படங்களுடன் பிரசுரமாகி இருந்தன. (ஐ)



## பிற்போடப்பட்டுள்ளது

இன்று நடைபெற இருந்த

**"உறங்காத கண்மணிகள்"**

வீடியோ திரைப்பட வெளியீட்டு விழா பிற்போடப்பட்டுள்ளது.

(சி-1969)



## மரண அறிவித்தல்

### கதிர்காமு பாலசிங்கம் (சந்திரன்)

*(அல்லைப்பிட்டி — புங்குடுதீவு)*

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அல்லைப்பிட்டி 2 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய கதிர்காமு பாலசிங்கம் (சந்திரன்) பிரான்சில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கதிர்காமு — நல்லம்மா ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற நடராசா — பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மருமகனும், சரஸ்வதி தேவியின் அன்புக் கணவரும், சனார்த்தனன், சயந்தன், ஓவியவாணி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், புஸ்பவதி, சரஸ்வதி, காலஞ்சென்ற கமலா தேவி மற்றும் மோகனசுந்தரம் (பிரான்ஸ்), பிறேமாவதி (பிரான்ஸ்), மோகனாவதி, பாலசுந்தரம் (பிரான்ஸ்), சுசீந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், துரைசிங்கம், செல்வராசா, திலகவதி, சறோஜினிதேவி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

தகவல்:
க. சுசீந்திரன
(சகோதரன்)

இல. 40, ரெம்பிள் றோட்,
யாழ்ப்பாணம்.

(37816)



## யாழ். வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி

(வண்ணை சிவன் கோயில்)

# தேவி மஹோற்ஸவம் திருவூஞ்சல்

இன்று (01 - 08 - 1995)
செவ்வாய்க்கிழமை
மாலை 5-00 மணி

மங்கள இசை:
திரு. என். கே. பத்மநாதன்
குழுவினர்

(37810)

– தேவஸ்தானம்.



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 01 - 08 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.